பள்ளி மாணவர்களுக்குப் பல சிரமங்கள் இருக்கின்றன என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஷிப்டு முறையை வைத்திருப்பதற்கு, பள்ளிகளிலே இடம் அதிகமாக இல்லாததுதான் காரணம் என்பது அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஷிட்டு முறையிருக்கின்ற பள்ளிகளை உடனடியாக ஆராய்ந்து அங்கே எல்லாம் அதற்குத் தகுந்த கட்டடங்களைக் கட்ட பணம் அரசு ஒதுக்கீடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: போதிய இட வசதி இல்லாத காரணத்தினால் ஷிப்டு முறையைக் கொண்டு வருகிறோம். இட வசதி இல்லாத பள்ளிகளில் ஷிப்டு முறையைக் கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்து வருகிறோம்.

காட்பாடி அரசினர் உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம்

*வினா எண் 170.—திரு என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் காட்பாடி அரசினர் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு கட்டிட வசதி இல்லையென்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் இதைப் போக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: (அ) இப்பள்ளியிலுள்ள மொத்தம் 29 பிரிவுகளில் ஒரே ஒரு வகுப்புக்கு மட்டும் இட மில்லை.

(ஆ) வருகின்ற நிதியாண்டில், அரசு அளிக்கும் நிதியிலிருந்து கட்டடங்கள் கட்ட பள்ளிகள் தேர்ந்தெடுக்கும்பொழுது மேற்கண்ட பள்ளியின் நிலையும் முன்னுரிமையுடன் பரிசீலிக்கப்படும்.

திரு. என். ஏ. பூங்காவனம்: துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளியில் ஆயிரத்திற்கு மேற்பட்ட பிள்ளைகள் பயில்கிறார்கள். அங்கே பிள்ளைகள் வெயிலிலும் மழையிலும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் முன்னுரிமை கொடுக்கப்படுவதாகச் சொன்னார்கள். இப்போது அந்த இடம் குறுகிய இடமாக இருக்கிற காரணத்தினால் பக்கத்தில் நல்ல இடமாக தேர்ந்தெடுத்து அங்கே வசதியை ஏற்படுத்தித் தருவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: வேறு நல்ல இடம் கிடைக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும்; அரசு அதற்கான ஒத்துழைப்பைத் தரும்.

திரு சி. கோபால்: துணைத் தலைவர் அவர்களே, இது போன்று வடஆற்காடு மாவட்டம் சோளிங்கரில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்கு என்று தனியாகக் கட்டடம் இல்லாத நிலைமை இருக்கிறது. அங்கே நிலம் கொடுப்பதற்கான சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டால் உடனடியாக அரசு கட்டிக்கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இதுபோன்ற நிலை பல பள்ளிகளிலே இருக்கின்றன. கட்டடமே இல்லாமல் இருக்கின்ற அரசுப் பள்ளிகளை நோக்குகிறபோது இந்தப் பள்ளிகள் பரவாயில்லை என்ற நிலை இருக்கிறது. அரசுப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் எல்லா நிலைகளையும் வைத்து அதற்கேற்ப இந்த உதவிகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. அந்த அடிப்படையிலே முன்னுரிமை தந்து பல்வேறு பள்ளிகளுக்கு நாம் நிதியை ஒதுக்கீடு செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. எ. சி. சண்முகம்: துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல பள்ளிக் கட்டடங்கள் தனியார் குழுவால் கட்டப்பட்டு அரைகுறையாக வேலைகள் இருக்கின்றன. அதுபோன்ற பள்ளிக் கட்டடங்களை முடித்துத்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பல்வேறு நிர்வாகச் சிக்கல் காரணமாக பல கட்டடங்கள் இப்படிப் பாதியிலேயே நின்றுகொண்டு இருக்கின்றன. அதையெல்லாம் கணக்கில் எடுத்து முழுமையான ஒரு திட்டத்தைப் போட்டு பாதியிலே இருக்கின்ற கட்டடங்களை முடிப்பதற்கான முயற்சியை அரசு மேற்கொண்டிருக்கிறது.

திரு. கே. ஆர். சுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, காட்பாடி உயர்நிலைப் பள்ளிக்குப் பின்புறத்திலே அரசுக்குச் சொந்தமாக இருந்த இடத்தினை ரயில்வே காலனிக்குக் கொடுத்து உதவி செய்து வந்தார்கள். இப்போது அந்த இடம் காலியாக இருக்கிறது. அந்த இடத்தை அந்தப் பள்ளிக்குப் பெற்றுத்தரவேண்டுமென்று அரசுக்கு விண்ணப்பம் வந்து இருக்கிறதா? அப்படி விண்ணப்பித்திருந்தால அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்போது இதுகுறித்த விவரங்கள் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

திரு ஜி. மூர்த்தி: பேரணாம்பட்டு ஒன்றியத்திலே மேம்பட்டியிலே மேல்நிலைப்பள்ளியில் கட்டடம் இடிந்துவிழும் நிலையில் இருக்கிறது. நான் ஏற்கெனவே இதுபற்றிக் கேட்டிருக்கிறேன். அந்தப் பள்ளியின் சிரமத்தைப் பார்த்து. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி காட்பாடி உயர்நிலைப்பள்ளிக் கட்டடத்தைப் பற்றியது. பேரணாம்பட்டைப் பற்றி இதிலே கேட்டால் அமைச்சரிடம் தகவல் இருக்காது. இதை அனுமதித்தால் ஒவ்வொருவரும் இப்படிக் கேட்பார்கள். இது மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாத கேள்வி.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: என்னிடத்திலே எல்லா விவரங்களும் இருப்பதாக நினைத்துக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். என்னிடத்திலே கேட்கப்பட்ட கேள்விக்குத்தான் பதில்,

தந்திருக்கிறார்கள். ஆகவே, இதிலே எல்லாப் பள்ளிக்கூடங்களை பற்றியும் கேள்விகளைக் கேட்டால் பதில் சொல்வதற்கு முடியாது. ஆகவேதான் தனிக் கேள்வி போட வேண்டுமென்று சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேள்வி போட்டிருப்பதாகச் சொல் கிறார்கள். அந்தக் கேள்வி வரும்போது நான் பதில் சொல் கிறேன்.

Appoin ment of clerks from various Departments as Sub-Magistrates,

*Q.No 171- THIRU S. ANDITHEVAR &THIRU S. SEMMALAI Will the Hon. the Minister for Co-operation and Law be pleased to state what is the special consid ration for recr iting clerks f. om Forest, Fisheries, Animal Husbandry Co-operative Soci ies Weights and Measures and f. om all other Departments to the Sub-Magistr cy?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தமிழ்நாடு குற்றவியல் மாஜிஸ்டிரேட்டுகள் தனிவிதிகள் 5 மற்றும் 13-ன்படி, குற்றவியல் இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் பதவிக்கு, மற்ற துறைகளி லுள்ள, சட்டப் படிப்பு உடைய நபர்களை, தற்காலிகமாக பணிமாற்றம் மூலம் நியமிக்கலாம். ஆகவே அவ்வாறு இதுவரை உயர்நீதி மன்றம் தக்க நபர்களை தேர்ந்தெடுத்து அரசு ஒப்புதல் பெற்று, குற்றவியல் இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டாக தற்காலிகமாக நியமித்துள்ளது. எனவே இதற்கு வேறு சிறப்புக் காரணம் இல்லை.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலை வரவர்களே, இதுபோன்று தற்காலிகமாக எடுத்த அவர்களை ரெகுலரைஸ் செய்வதற்கு அரசு உத்தேசித்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்படித் தற்காலிகமாக எடுக்கப் பட்டவர்கள் 1965-ஆம் ஆண்டிலிருந்தே எடுக்கப்பட்டவர்கள். அவர்களை அப்படி எடுத்தும்கூட, உயர்நீதிமன்றமே. கிட்டத் தட்ட 1965-இலிருந்து எடுக்கப்பட்டவர்கள் பன்னிரண்டு ஆண்டு களாக இத்துறையிலே அவர்கள் அனுபவம் பெற்றிருக்கின்ற காரணத்தாலே திருப்பித் தாய்த் துறைக்கே இவர்கள் அனுப்பப் படுவார்களானால் அவர்களுக்குச் சமமாக இருக்கின்றவர் களெல்லாம் உயர் பதவிக்குச் சென்று இவர்களுக்கு எந்த இடத்தில் எங்கு அமைப்பது என்பதுகூட முடியாத ஒரு பிரச்னை எழும் என்ற காரணத்தாலே இவர்களை நிரந்தரமாக்க அரசு முடிவு செய்துள்ளது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்படிப் பல்வேறு துறை களிலேயிருந்து, சட்டத் துறையிலிருந்து சப்-மாஜிஸ்ட்ரேட் பதவிக்கு நியமிக்கும்பொழுது, அந்த சப்-மாஜிஸ்ட்ரேட்